
# திரும்பிப் பார்க்கிறேன்!

உங்களோடு பகிர்ந்த நாட்க்களை!.
உங்கள் அன்பால்; பாசத்தால்;
தாய்த் தமிழால்,
அதிலும் பண்பால்,
அளவில்லாமல் அளவளாவிய நாட்கள்;
எல்லாம் என்றும் இனிமையான நாட்கள்!

பணி காலத்தில்,
பலருக்கும் நன்மையை செய்திருப்பீர்கள்!.
ஆனாலும்,
சில நேரங்களில் மனம் வருந்தி இருப்பீர்கள்!.
காரணம் உம் பெருந்தன்மை!.
மனம் வருந்த வேண்டாம்!
காலம் பதில் உரைக்கும்!



உங்களுக்கென்ன?
தமிழுக்காகப் பேனாவில்,
மை நிரப்பும் பணி கிட்டியது!.
தொடரட்டும்,
உங்கள் தமிழ் ஆர்வம்!
வாழ்த்துக்கள்!
வரும் காலங்கள் எல்லாம்,
உமது வாழ்வில் வசந்தமாகட்டும்!
உம் தமிழ் படைப்புகள்;
எல்லாம் ஓவியமாகட்டும்!

இனி பிறக்கும் மாதங்கள் எல்லாம்,
கண்ணனுக்காக மார்கழி யாகட்டும்!
நீங்கள் பறிக்கும் பூக்கள் எல்லாம்,
கண்ணனுக்காக மல்லிகையாகட்டும்!
இனி சிறக்கட்டும்;
வாழ்க்கை பயணம் மணிப்புறாவோடு!

ஒலிக்கட்டும் சப்தங்கள்!
இல்லத்தில் தாலாட்டுகளோடு!
இனிக்கட்டும் இல் வாழ்க்கை மாங்கனி போல்!
வீசட்டும் இல்லத்தில் என்றும் தென்றல்!
இனி உங்களிடம்,
பொங்கட்டும் கவிதை பால் போல!.
போகட்டும் உங்கள் மனத் துன்பம் பனி போல!
உயரட்டும் உம் பண்பு அன்னை போல்!
சிறக்கட்டும் உம் பெருந்தன்மை தமிழ்ப் போல்!
வாழ்க வளமுடன்!
எல்லா நலன்களும் பெற்று நீடு வாழ்க!
புதிதாக முளைக்கின்ற,
கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், துணுக்குகள்,
கேள்விகள் விடைகள் எல்லாம்,
விழுதுகளாக வளரட்டும்! மீண்டும் சந்திப்போம்!!

என்றும் அன்புடன்

**--பகவதி பெருமாள் பிள்ளை. (28-05-2020)**